JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OFJUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | 277/2010 |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | PW7 | Prosecution /Defence / Court | |
| Name | Tr.Ponganapathy Retd(SI of Police) | Caste | |
| Father's Name | | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of
Date: 29.09.2021

<u>முதல் விசாரணை</u>

நான் தற்பொழுது பணி ஓய்வு பெற்று கவுந்தப்பாடியில் வசித்துவருகிறேன். சம்பவ சமயத்தில் நான் பெருந்துறை காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியிலிருந்தபோது கடந்த 07.10.2009 தேதியில் சுமார் 8.30 மணிக்கு நான் பெருந்துறை காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக நிலைய பொறுப்பில் இருந்தபோது தாமோதரன் மகன் சத்தியமூர்த்தி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரை பெற்றும் காவல்நிலைய குற்ற எண்.829/2009 இ.த.ச பிரிவு 380-ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தும் அசல் புகாரையும் முதல் தகவல் அறிக்கையையும் கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தும் மற்றொரு புகார் நகலையும் மு.த.அ-வின் அச்சு நகலையும் ஆய்வாளர் திரு.அக்பர் கான் அவர்களிடம் சமர்ப்பித்தேன். இது குறித்து ஆய்வாளர் என்னை விசாரித்தார். மேற்படி **முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.**13.

**1,2,4 எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை.,**

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடமானது காவல்நிலையத்திலிருந்து சுமார் அரை கிலோமீட்டர் தூரத்தில் உள்ளதென்றால் சரிதான். அ.சா.1 சம்பவம் நடந்து மறுநாள்தான் காவல்நிலையத்திற்கு வந்து புகார் அளித்துள்ளார் என்றால் சரிதான். சம்பவம் 06.10.2009 தேதியில் மதியம் 1.30 மணியளவில் நடந்தது என்றும் புகாரானது மறுநாள் காலை 8.30 மணிக்கு கொடுக்கப்பட்டதுள்ளது அதற்கான காலதாமதம் சுமார் 19.00 மணிநேரம் என்றால் சரிதான். வாதியால் எதற்காக தாமதம் ஏற்பட்டதென்று மு.த.அ-வில் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். பொதுவாக இவ்வாறு சம்பவம் நடைபெற்றால் அ.சா.1 காவல்நிலையத்தில் தகவல் சொல்லி அதன்பேரில் நாங்கள் சம்பவ இடம் சென்று பார்வையிட்டு பின்னிட்டு மு.த.அ பதிவு செய்தேன் என்றால் சரியல்ல. அ.சா.1 கொடுத்த புகாரையும் முதல் தகவல் அறிக்கையையும் எந்த தேதியில் கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன் என்றால் அன்றைய தினமே அனுப்பிவைத்துள்ளேன். அ.சா.1 தன்னுடைய களவு போன சொத்து எவ்வளவு கிராம் என்றும் அதற்குண்டான மதிப்பை குறிப்பிட்டுள்ளார். ஆனால் அதை நிரூபிக்கும் பொருட்டு அ.சா.1 புகாருடன் எந்த ஆவணமும் அளிக்கவில்லை என்றால் சரிதான். நான் சொன்னதுபோல் சொன்னநேரத்தில் அ.சா.1 புகார் அளிக்கவில்லை என்றால் சரியல்ல. நான் அ.சா.1 இடமிருந்து புகாரை பெற்று சொன்னநேரத்தில் மு.த.அ பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல.

5 ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, 3சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர், பெருந்துறை.

Signature of the Witness

Name of the Interpreter
Tmt.K.S.Shabeena, B.A.B.L.
Judicial Magistrate,
Perundurai.

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act, 1969, (Central Act 44 of 1969 ) on the-----day of --------------2021.

Signature of Interpreter